**நெஸ்லே லங்கா நிறுவனம், பால் மற்றும் தேங்காய் உற்பத்தித் தொழிற்துறைகளைப் பலப்படுத்தும் வகையில் முதலீடு செய்ய ஆரம்பித்துள்ளது**

நெஸ்லே நிறுவனம், கடந்தகாலங்களில் இலங்கையில் மேற்கொண்டுவந்துள்ள முதலீடுகளின் தொடர்ச்சியாக, உள்நாட்டில் பால் மற்றும் தேங்காய் உற்பத்தித் தொழிற்துறைகளைப் பலப்படுத்தவேண்டும் என்ற தனது அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாக, குருணாகல் பண்ணல என்ற இடத்திலுள்ள தனது தொழிற்சாலையில், புதிய உற்பத்தி நிலையத்திற்கான அத்திவாரத்தை இட்டு, மற்றுமொரு சாதனை இலக்கினை எட்டியுள்ளது.

நெஸ்லே நிறுவனத்தில் குருணாகல் தொழிற்சாலையில், இப்புதிய உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான அத்திவாரம் இடும் நிகழ்வில், அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரான கௌரவ காமினி ஜெயவிக்கிரம பெரேரா, அனர்த்த முகாமைத்துவ அமைச்சரான கௌரவ அனுர பிரியதர்ஷன யாப்பா, நிதியமைச்சரான கௌரவ ரவி கருணாநாயக்க, கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சரான கௌரவ பீ. ஹரிசன், சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சரான கௌரவ சுஜீவ சேனசிங்க மற்றும் இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான சுவிட்சலாந்து தூதுவரான மேன்மை தங்கிய ஹெயின்ஸ் வோக்கர்-நெதர்கூன் ஆகியோர் இவ்வைபவத்தில் சிறப்பு அதிதிகளாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த புதிய முதலீட்டின் மூலமாக பால் மற்றும் தேங்காயை மூலமாகக் கொண்ட, தனது பிரபலமான உற்பத்திகளின் உற்பத்தி ஆற்றலை விஸ்தரிப்பதற்கு நிறுவனம் திட்டமிட்டுள்ளதுடன், உள்நாட்டு சுவையரும்புகள் மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளை ஈடுசெய்யும் வகையில் அதிகளவான உற்பத்திகளை உள்நாட்டிலுள்ள நுகர்வோருக்கு வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 110 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொழிற்பட்டுவந்துள்ள நெஸ்லே நிறுவனம், பெரும்பாலும் உள்நாட்டிலேயே பெறப்படுகின்ற மூலப்பொருட்களை உபயோகித்து, உள்நாட்டிலேயே தனது உற்பத்திகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள ஒரு உள்நாட்டு பல்தேசிய நிறுவனம் என்ற பெருமையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இன்று நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற நெஸ்லே உற்பத்திகளில் 90% இற்கும் அதிகமானவை அதன் தொழிற்சாலையிலேயே உற்பத்தி செய்யப்படுவதுடன், அவை 50 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகின்றது. மேலும், இறக்குமதிக்கு பிரதியீடாக உற்பத்திகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதையும், ஏற்றுமதி வாய்ப்புக்களை விஸ்தரிப்பதையும் முன்னெடுத்து வருகின்றது.

நெஸ்லே நிறுவனத்தின் புதிய முதலீட்டிற்காக நிறுவனத்தைப் பாராட்டிய கௌரவ ரவி கருணாநாயக்க அவர்கள் நாட்டில் 110 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொழிற்பட்டுவருகின்ற நெஸ்லே நிறுவனத்தைப் போற்றியதுடன், உள்நாட்டு பாற்பண்ணையாளர்கள் சமூகத்தை வலுவூட்டி, அதன் மூலமாக இறக்குமதிகளுக்குப் பதிலாக உற்பத்திகளை உள்நாட்டிலேயே முடிந்த வரை உற்பத்தி செய்து, உள்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நிவனத்தின் முயற்சிகளையும், பங்களிப்புகளையும் பாராட்டினார்.

*''இலங்கை நாட்டின் மீது நாம் மிகுந்த அர்ப்பணிப்பு கொண்டுள்ளதுடன், நாட்டின் வளர்ச்சிவாய்ப்புக்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளோம்,''* என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் குறிப்பிட்டார். *''எமது புதிய முதலீடானது, இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவேண்டும் என்ற எமது நோக்கத்தை மீளவும் எடுத்துரைப்பதுடன், நாம் தினசரி அடிப்படையில் ஒன்றிணைந்து பணியாற்றுகின்ற பண்ணையாளர்களை வலுவூட்டி, அவர்களின் வாழ்வை மேம்படுத்தும்,''* என்று தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனத்தின் பால் மற்றும் தேங்காய் உற்பத்தி பண்ணையாளர்களின் முயற்சிகளுக்கு இனங்காணல் அங்கீகாரம் அளிக்கும் வகையில், அத்திவாரம் இடும் நிகழ்வுடன் ஒன்றியதாக பண்ணையாளர்களுக்கான பாராட்டு வைபவம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இதில் 200 இற்கும் மேற்பட்ட நெஸ்லே பண்ணையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

''நான் 2010 ஆம் ஆண்டில் 5 லீட்டர் பாலுடன் மட்டுமே எனது பால் வியாபாரத்தை ஆரம்பித்திருந்தேன். எனது பாலுற்பத்தியை அதிகரிப்பதற்காக பண்ணையாளர்களுக்கான பயிற்சிகளை தொடர்ச்சியாக வழங்கி, எமக்கு உதவி வந்துள்ள நெஸ்லே நிறுவனத்தின் பணிகளுக்கு நான் நன்றி கூறுகின்றேன். அதன் பலனாக இன்று நான் தினசரி 100 லீட்டர் பாலை உற்பத்தி செய்யும் அளவிற்கு எனது வியாபாரத்தை வளர்ச்சிபெறச்

செய்துள்ளேன் என்று முல்லைத்தீவைச் சேர்ந்த நெஸ்லே பாற்பண்ணையாளாரான கே. மதனகுமாரி அவர்கள் குறிப்பிட்டார். ''இன்னும் அதிகளவான பாலை விற்பனை செய்து, பாரிய வருமானத்தை ஈட்டுவதற்கு நெஸ்லே நிறுவனம் எங்களைப் போன்ற பாற்பண்ணையாளர்களுக்கு வழங்கிவரும் வாய்ப்புக்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம்'' என்று குறிப்பிட்டார்.

குறிப்பாக பால் மற்றும் தேங்காய் உற்பத்தித் தொழிற்துறைகள் அடங்கலாக, இலங்கையின் கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து, அதற்கு ஆதரவளிப்பதில் நிறுவனம் கணிசமான முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. இலங்கையில் தனியார்துறையில் அதிகளவான பாலைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ள நிறுவனம் என்ற வகையில், நாட்டில் விற்பனைக்குக் கிடைக்கபெறுகின்ற பாலில் மொத்தமாக மூன்றில் ஒரு பங்கை சேகரித்தது வருவதுடன், உலகில் தேங்காய்பால்மாவை ஏற்றுமதி செய்யும் பாரிய நிறுவனங்களுள் ஒன்றாகவும் திகழ்ந்துவருகின்ற நெஸ்லே, 27,000 வரையான உள்நாட்டு பண்ணையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவளித்து வருகின்றது. 2016 ஆம் ஆண்டில் மட்டும் அது இத்தகைய மூலப்பொருட்களை கொள்முதல் செய்துள்ளதன் மூலமாக, உள்நாட்டு பண்ணையாளர்களுக்கு ரூபா 6 பில்லியன் தொகையை கொடுப்பனவாக வழங்கியுள்ளது. அண்மையில், இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து தெங்கு அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ள நிறுவனம், தெங்கு தோட்டச் செய்கையில் ஈடுபடும் 2,000 குடும்பங்களுக்கு, 150 ஏக்கர் நிலப்பரப்பில் நாட்டுவதற்காக, 10,000 தென்னம்கன்றுகளையும் நன்கொடையாக வழங்கியிருந்தது. மேலும், மிகச் சிறந்த நடைமுறைகளை காண்பிக்கும் வகையில், 2 மாதிரி தென்னம்தோட்டங்களையும் அது ஆரம்பித்துள்ளது.

உள்நாட்டு சமூகத்தின் மத்தியில் வலுவான ஒரு அங்கமாக நெஸ்லே திகழ்ந்து வருவதுடன், கிராமியப் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு உதவி, உள்நாட்டில் திறமைசாலிகளை விருத்தி செய்வதன் மீது முதலிட்டு, புதிய உற்பத்தித் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து, உள்நாட்டு சுவையரும்புகள் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை ஈடுசெய்யும் வகையில் தனது பெயருக்கேற்றவாறே, உலகப்பிரசித்திபெற்ற வர்த்தகநாமங்களை உள்நாட்டிலுள்ள நுகர்வோருக்கு வழங்கிவருகின்றது. இலங்கையிலுள்ள மக்களுக்கு ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் உடல்நலனைப் பேணும் உற்பத்திகளை விநியோகிப்பதில் நெஸ்லே மிகவும் பெயர்பெற்று விளங்குகின்றது.